செய்தி வெளியீட்டு எண் : 42 நாள் : 16.09.2021

**தேனி மாவட்டம்**
**கொரோனா தடுப்பூசி பணிகளில் சிறப்பாக பணிகள் மேற்கொண்ட ஊராட்சி மன்றத்தலைவர் இல்லத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் சென்று அவர்களுடன் தேநீர் அருந்தி, கலந்துரையாடினார்.**

*****

தேனி மாவட்டம், கொரோனா தடுப்பூசி பணிகளில் சிறப்பாக பணிகள் மேற்கொண்ட சுருளிப்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி நாகமணி வெங்கடேசன் அவர்களின் இல்லத்திற்கு இன்று (16.09.2021) நேரடியாக சென்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் அவர்களுடன் தேநீர் அருந்தி, கலந்துரையாடி, தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கொரோனா நோய்த் தொற்றின் மூன்றாம் அலையிலிருந்து பொதுமக்களை பாதுகாத்திடும் பொருட்டு, கொரோனாவிலிருந்து நம்மை பாதுகாப்பதற்கும், கொரோனாவினை எதிர் கொள்வதற்குமான பேராயுதம் தடுப்பூசி என்பதனையும் கருத்தில் கொண்டு, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தினந்தோறும் கொரோனா தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

அதனைத்தெடர்ந்து, தேனி மாவட்டத்தில் மொத்தம் 410 இடங்களில் 12.09.2021 அன்று நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களின் மூலம் மொத்தம் 63,645 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டது. மாவட்டத்தில் தினந்தோறும் நடைபெற்று வரும் கொரோனா தடுப்பூசி முகாம்கள் மற்றும் மாபொரும் கொரோனா தடுப்பூசி முகாம்கள் மூலம் மாவட்டத்தில் உள்ள 130 ஊராட்சிகளிலும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கொரோனா தடுப்பூசி பணியினை முழுமையாக மேற்கொள்ளும் ஊராட்சி மன்றத்தலைவர்களின் இல்லத்திற்கு நேரடியாக வருகை வந்து தங்களுடன் தேநீர் அருந்தி, கலந்துரையாட உள்ளதாக ஊராட்சி மன்றத்தலைவர்களிடம் ஆலோசனைக் கூட்டத்தின் போது தெரிவித்திருந்தேன். அதன்படி, கம்பம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சுருளிப்பட்டி ஊராட்சியில் 6,985 நபர்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் தற்போது, 18-வயது பூர்த்தியடைந்த 4,502 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து, மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி மன்றத்தலைவர்களின் இல்லங்களுக்கு நேரடியாக சென்று தேநீர் அருந்தி கலந்துரையாட உள்ளேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, சுருளிப்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கொரோனா தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, கொரோனா தடுப்பூசி முதல் கட்டம், இரண்டாம் கட்டம் செலுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை, கோவிட்ஷீல்டு மற்றும் கோவேக்சின் தடுப்பூசி மருந்துகள் இருப்பு குறித்து துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

மேலும், உத்தமபாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில், பேருந்து நிலையம், கடைகள் மற்றும் பேருந்துகளில் கொரோனா நோய்த் தொற்று தடுப்பு பணிகள் தொடர்பாக முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியை கடைபிடிப்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, சில கடைகளில் முகக்கவசம் அணியாமல் இருந்ததால் ஊழியர்களுக்கும், கடையின் நிர்வாகிக்கும் முகக்கவசம் கண்டிப்பாக அணிய வேண்டும் என அறிவுறுத்தி, அணியாமல் இருந்த காரணத்திற்கு சில கடைகளுக்கு அபாரதம் விதித்திடவும், சில கடைகளை தற்காலிகமாக மூடுவதற்கும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த நிகழ்வுகளின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஆர்.தண்டபாணி, கம்பம் ஒன்றியக்குழுத்தலைவர் பழனிமணிகணேசன், கம்பம் ஊராட்சி ஒன்றியக் குழு துணைத்தலைவர் தங்கராஜ், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் தமயந்தி, ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் தமிழரசன், சுருளிப்பட்டி ஊராட்சி துணைத்தலைவர் ஜெயந்திமாலா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெயகாந்தன், கோதண்டபாணி உட்பட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**